REGD. No. M. 6311

PHONE No.: 55630

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 308

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்.. அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.M.K.

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை: வைகாசி 27உ புதன் (9—6—54) ★ ★ ★ வெளியூர்: வைகாசி 28உ வியாழன் (10—6—54)

அரவம் போல் தலை நீட்டுகிறார்!

மாண்ட திட்டத்துக்கு மாரடிப்பு!

ஆச்சாரியாரின் அறிக்கை அம்பு!

—(:)—

காமராஜரிடம் கைவரிசை காட்டுவாரா?

★

ஆச்சாரியார், புற்றரவம் மெள்ளத் தலையை வெளியே நீட்டுவதுபோல, இப்போது, தமது காரியத்தைத் துவக்குகிறார் என்று தெரிய வருகிறது.

தம்மை 'வீட்டுக்கு' அனுப்பினால் நாடே சீறி எழும்; காங்கிரசே பிளவுபட்டுப் போகும்; நேரு பண்டிதரே நடுநடுங்கிப் போவார்; திக்கு நோக்கித் தெண்டனிட்டு தம்மை அழைத்துச் சென்று பதவியில் மீண்டும் உட்கார வைத்துச் 'சோடசோபசாரம்' செய்வார்கள் என்று எண்ணினார்—ஏமாந்தார்.

நாடே, மகிழ்ச்சி அடைந்தது—'மகான்' கோலம் போட்டுக் கொண்டு மக்களைக் கொடுமை செய்துவந்த இந்த மகானுபாவர், பதவியை விட்டு விலகியது கண்டு!

புதிய மந்திரி சபை எளிதில் அமையாது—அதை அமைக்கும் போதே எதிர்ப்பும், ஆபத்தும் கிளம்பும் என்று எதிர்பார்த்தார்—அதுவும் நடைபெறவில்லை.

இனி நான் 'ராமாயணம்' சொல்லப்போகிறேன் என்றார்—'கூடாது, கூடாது; பதவியில் இல்லாவிட்டாலும் அரசியல் பிரச்னைகளைப் பற்றிப் பேசித் தெளிவு தரவேண்டும்; புதிய மந்திரி சபைக்கு யோசனைகள் கூறிக்கொண்டிருக்க வேண்டும்,' என்று அனைவரும் கெஞ்சிக் கூத்தாடுவார்கள்—என்ற நினைப்பில்! ஒருவரும் சட்டை செய்ததாகத் தெரியவில்லை. அவருக்குத் தகுந்த வேலை 'சக்ரவர்த்தி திருமகன்' எழுதுவதுதான்; செய்யட்டும் என்று இருந்துவிட்டனர்.

டில்லி வட்டாரம், ஒரு 'மேதை'யை இழக்கச் சம்மதிக்குமா; எப்படியும், நேரு பண்டிதர் அந்தஸ்து தருவார் என்று விமானக்கூடம் சென்று சென்று பண்டிதரிடம் பேசிப் பார்த்தார்—பலன் இல்லை.

இவ்வளவு ஏமாற்றங்கள் அவருடைய மனதை உடைத்து விட்டிருக்கிறது.

காமராஜர், புதிய மந்திரி சபை அமைத்ததோடு நிற்கவில்லை—ஆச்சாரியாரின் கல்வித் திட்டத்தையும் ஒழித்துக் கட்டினார்.

நாடு, விழா கொண்டாடிற்று; 'ஜனநாயகம் வென்றது' என்று மக்கள் மகிழ்ந்தனர்; காமராஜருக்கும் பல இடங்களிலிருந்தும் பாராட்டுதல் கிடைத்தது.

ஆச்சாரியாரின் கல்வித் திட்டம் ஒழிந்தது குறித்து, ஒரு சொட்டுக் கண்ணீர் விடவும் யாரும் முன்வரவில்லை. இது கண்டு ஆச்சாரியாருக்குத் தாங்க முடியாத துக்கம்—கோபம்.

இவ்வளவு விரைவில் தன்னை மக்கள், செல்லாக் காசு ஆக்கிவிடுவார்கள் என்று அவர் எதிர்பார்க்கவில்லை.

எனவே, தன் கையே தனக்கு உதவி என்ற பழமொழிப்படி, ஆச்சாரியார், தாமாகவே தமக்கு 'பராக்கு'க் கூறிக் கொள்ள முன்வந்துவிட்டார்.

இடையில், 'தொண்டரடிப் பொடிகள்' தூண்டிவிடப்பட்டனர்; கல்லும் சொல்லும், மண்ணும் மாச்சரியமும் வீசினர்; மக்கள் மன்னித்துவிட்டனர்.

இனித் தாமே 'அம்பலம்' ஏறியாக வேண்டுமென்று தீர்மானித்த ஆச்சாரியார், இன்று 'இந்து' இதழில், ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

அருமையான திட்டம்! அற்புதமான திட்டம்! எல்லோரையும் படிக்கவைக்கும் திட்டம்! உத்தியோகத்துக்கு அலையும் போக்கை ஒழித்துக் கட்டும் திட்டம்! இதை ஒழித்துக் கட்டிவிட்டார்களே! ஐயகோ! அந்தோ!—என்றெல்லாம் அங்கலாய்த்துக் கொண்டிருக்கிறார், அறிக்கையில்!

அரசியலைப் பிழைப்பாக்கிக் கொண்டவர்கள், வேண்டுமென்றே எதிர்ப்பை மூட்டிவிட்டனர் என்று பேசுகிறார்—அரசியலைப் பிழைப்பாக்கிக் கொண்டு கவர்னர் - ஜெனரல் வரையில் அனுபவித்து, விரட்டப்படுவதற்கு முன்புவரை 'இரட்டைச் சம்பளம்' வாங்கி வந்த இந்த வேதாந்த சிரோமணி.

மாண்டுபோன திட்டத்துக்கு இவ்வளவு நாள் கழித்து, இவர் 'மாரடிப்பு' நடத்துவதன் மர்மம் என்ன?

திட்டத்தை 'ரத்து' செய்ததும்—நாடு சீறும்—என்று பைத்தியக்காரத்தனமாக அவர் எதிர்பார்த்தார். நடைபெற்றதோ வெற்றி விழாக்கள்! பாராட்டுக் கூட்டங்கள்! காமராஜர் வாழ்க — என்ற முழக்கங்கள்!

எப்படி இருக்கும் மனம்? பரிதாபம்! 'சரி, 'இந்து' இருக்கப் பயமேன்"—என்று கிளம்புகிறார் அறிக்கை அம்புகளுடன்!

திராவிட முன்னேற்றக் கழகம், 'அம்பலம்' ஏறி ஆச்சாரியார் தமது 'மேதை'யைக் காட்ட முன்வருவதை, வாய்ப்பாகக் கொள்ளும்!

வாட்டும், வாட்டும்—மக்கள் மன்றத்திலே பேசட்டும்—நாமும் பேசுவோம்—நாடு அவருடைய திட்டத்தின் நயவஞ்சகத்தை அறிந்து கொள்ள வழி ஏற்படும் என்று எண்ணி, தி. மு. கழகம் மகிழ்கிறது.

நீண்டதோர் அறிக்கையில் ஆச்சாரியார், தீர்த்துக்கட்டப்பட்ட தமது திட்டத்துக்குத் தாமே திருப்பல்லாண்டு பாடுகிறாரே தவிர, அதைத் தீர்த்துக்கட்டிய காமராசர் மந்திரி சபையைக் கண்டிக்கும் துணிவு கொள்ளவில்லை!

சென்னையில் ஏற்கனவே ஆச்சாரியாரின் அடியார்கள், காமராசரின் சார்பானவர்களின் கூட்டத்தில் கலகம் விளைவித்திருக்கிறார்கள்.

ஆகவே, திட்டம் தீட்டிக் கொண்டு வேலையில் இறங்குகிறாரோ என்று சந்தேகிக்க வேண்டி இருக்கிறது.

எப்போது அழைத்தாலும் தன் பக்கம் வந்து நிற்கக் கூடியவர்கள் சிலர், சட்டசபையிலும், மந்திரி சபையிலும் இருப்பது ஆச்சாரியாருக்குத் தெரியும்.

அந்தத் துணையை நம்பி, எதிர்ப்பு வேலை செய்து, காமராசரைக் கவிழ்க்க எண்ணுகிறாரோ என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது.

தோல்வியால் ஏற்பட்ட வேதனையும், வெட்கமும்தான் ஆச்சாரியார் அறிக்கையில் தெரிகிறது; தெளிவு ஏதும் காணோம். பேசிப் பேசிப் புளித்துப்போன வாதங்கள் மலிந்தது, அறிக்கை! இடையிடையே, தம்மைத் தவிர மற்றவர் எல்லாம் 'மட்டம்', என்ற மமதை மனப்போக்கு தெரிகிறது.

இந்த அறிக்கை மூலம், ஆச்சாரியார், 'பதவி பிடிக்கும் காரியத்தைக் கைவிட்டுவிடவில்லை,' என்று தெரிவிக்கிறார். காமராசருக்கு எதிர்ப்பு மூட்ட, இந்தக் கைங்கரியத்தைத் துவக்கி இருக்கிறார், என்பது புலனாகிறது!

"ஆனால், காமராஜரிடம் கைவரிசை காட்ட, இந்த அறிக்கைதான், துவக்கமோ என்று சந்தேகிக்க இடம் இருக்கிறது."

தனிநாடு கோரிக்கை

நாகர்கள் கைவிடவில்லை

★

"நாகர்கள் தங்கள் தனி நாடு கோரிக்கையைக் கைவிட்டனர்," என்று பத்திரிகைகளில் வெளியான செய்தியை நாகர்கள் கவுன்சில் மறுத்திருக்கிறது.

இப்போதும் சரி, அல்லது எப்போதும் சரி, நாகர்கள் தங்கள் தனி நாடு கோரிக்கையைக் கைவிடமாட்டார்கள் என்றும், அதற்காகப் போராடுவார்கள் என்றும் நாகர்கள் கவுன்சிலின் அறிக்கை ஒன்று கூறுகிறது.

இலங்கை இந்தியர் பிரச்சினை

"சென்னையின் கருத்துக் கேட்கப்படவில்லை"

முதல் அமைச்சர் காமராசர் தகவல்

சென்னை, ஜூன் 9—"நாடற்ற இந்திய வம்சாவளியினருக்கு இலங்கை சர்க்கார் அரிசி ரேஷனும், வேலை வசதியும் மறுக்க உத்தேசித்திருப்பது குறித்து சென்னை சர்க்காரின் கருத்து இதுவரை டில்லியிலிருந்து கோரப்படவில்லை,"—என்று சென்னை முதல் அமைச்சர் கே. காமராசர் நிருபர்களிடம் கூறினார்.

"இலங்கை இந்தியர் பற்றி சென்னை சட்டசபை நிறைவேற்றிய தீர்மானத்துக்கு டில்லியிலிருந்து பதில் வந்ததா?" என்று கேட்டபோது, "இம்மாதிரியான செய்திகளை இந்திய சர்க்காரே கவனித்து நடவடிக்கை எடுக்குமாதலால், பதில் ஒன்றும் எதிர்பார்ப்பதற்கில்லை," என்று அவர் கூறினார்.

ஐந்தாண்டுத் திட்டம் தோல்வி

மக்களை மதியாத திட்டம் என்கிறார் கிருபளானி!

'இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்டம் தோல்வியடைந்துவிட்டது; அது மட்டுமல்ல; கடந்த மூன்றாண்டு காலமாக நாட்டில் வேலையிலாத் திண்டாட்டம் அதிகரித்து விட்டது," என்று, இன்றிரவு நடைபெற்ற பிரஜா-சோஷலிஸ்டு பொதுக் குழுவில் பேசும்போது ஆச்சார்ய கிருபளானி கூறினார்.

'இந்த ஐந்தாண்டுத் திட்டம் மக்களை அலட்சியம் செய்து தயாரிக்கப்பட்டது; விவசாயத்துடன் ஒத்துழைக்காத முறையில் தயாரிக்கப்பட்டது."

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நெல்லை மாவட்ட — தி. மு. கழக உறுப்பினர்க்கு

★

திராவிட முன்னேற்றக் கழகத்தின் நெல்லை மாவட்டக் கிளை உறுப்பினர்களைக் கலந்து பேசி, ஆக்க வேலைகளுக்கான சிலபல முடிவுகளை எடுக்க வேண்டியிருப்பதால், நெல்லை மாவட்டக் கழகத்தின் செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், ஏனைய உறுப்பினர்கள் ஆகியோர் இதனையே அழைப்பாகக்கொண்டு, 13—6—54 ஞாயிறன்று காலை முக்கூடலில் கூட வேண்டுகிறேன். உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வருக.

"அறிவகம்", சென்னை
9—6—54

இரா. நெடுஞ்செழியன்,
துணைச்செயலாளன், தி. மு. கழகம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 9-6-54 புதன்

எது தேவை?

வாழ்க்கை வாழ்வதற்கே—வாழப் பிறந்தோம், சாகவல்ல—என்ற உயிர் வாழ்வதின் இயல்பு தெரிந்தோர், நமது மக்களிடை மிக மிக அரிது!

இதுவரை மனித வாழ்வின் அடிப்படை லட்சியம் என்ற கருத்து மக்களிடை தோன்ற ஆண்டு பல ஆயிரம் பிடித்தது. இவ்வாழ்க்கைக் கண்ணோட்டத்தை நமது மக்கள் பெற, மேலும் பல ஆயிரம் ஆண்டு பிடித்தது.

இப்பொழுதும் பெற்றிருக்கவில்லை—அனைத்து மக்களும் இவ் விழுமிய கண்ணோட்டத்தை! இதற்காக நல்லறிவாளர்கள் எடுத்துக்கொண்ட அரிய முயற்சிக்கு, மதம் பாதுகாவலர்களால், சமயத் தாதுவர்களால் போடப்பட்ட முட்டுக்கட்டைகளோ அனந்தம்!

மக்கள் எண்ணத்தில் மகத்தான மாற்றம் ஏற்பட்டால்தான், வாழ்க்கை ஏற்பாட்டில், அவசியமானதோர் தேவையை நிறைவேற்றும் திட்டம் உருவாகும்—அதற்கான சூழ்நிலை உருவெடுக்கும் என்ற இயற்கை நியதியை உலக முன்னேற்ற வரலாறு சுட்டிக்காட்டுகிறது. மனித சமூகத்தின், ஒவ்வொரு காலகட்டத்திலும் உருவாகும் இப்புத்துணர்வைத்தான், தத்துவப் புரட்சி என்கின்றனர், மனித உள நூல் கற்றோர்.

இத்தத்துவப் புரட்சி இப்பாரத கண்டத்தில், துவக்கி வைக்கப்பட்டது புத்தரால், அவர் காலத்தில்! மகேஸ்வரனிலும், மக்கள் தாழ்ந்தவர்—இழிந்தவர் என்ற ஏற்பாட்டின் பாதுகாப்புப் படையாகப் பணியாற்றி வந்த சனாதன மார்க்கம். மக்கள் சிந்தனையைக் கிளறிவிட்ட புத்தரின் புதிய பாதையை, அவர் மறைவுக்குப்பின் மீண்டும் அழித்தொழிப்பதில் வெற்றி கண்டது.

புத்தர் போதனையால் மக்களிடம் உருவான 'தாம் உயர்ந்தவர்' என்ற பெரும் நினைப்பும், தன்னம்பிக்கையும் சிறுகச் சிறுக மறையத் தொடங்கி முடிவில் ஏட்டளவோடு நின்றுவிடும் நிலை பெற்றுவிட்டது. ஆரியக் கலாச்சாரக் காவலர்கள், அதற்கான சதியைத் திறம்படச் செய்து முடித்துவிட்டனர்.

அதன் பிறகு, மக்களின் எண்ணம், எப்பொழுதும் போல், மடைமைப் படுகுழியிலேயே புதைந்து கிடந்தது. 'நம்மால் என்ன ஆகும்? எல்லாம் அவன் செயல்!' என்ற ஆரிய பக்தி மார்க்கத்தில், மீண்டும் மக்களின் மனம் சென்று படிந்துவிட்டது.

ஏகாதிபத்தியத் தொடர்பு, இந்தக் கெட்ட நினைப்பு மறுபடியும் ஆட்டங்கொடுக்கத் தக்க நேர் சூழ்நிலையை உருவாக்கியது. மக்களின் கருத்தைப் புதிய பாதைப் பக்கம் திருப்ப வேண்டும் என்ற துடிப்பிலே-யே, ஏகாதிபத்திய அதிகாரிகளுக்கு தேவையான அளவில் உண்டாகவில்லை; அரைகுறையாகவே, அத்துறையில் அவர்கள் முயன்றனர்.

'அடிமை' மக்கள் புது விழி பெறுவது தங்கள் மூல நோக்கமான சுயநல வேட்டைக்கும், கேடு சூழும் என்னுவது ஒருநாள் எவற விதியை, ஏகாதிபத்திய எத்தர்கள் அறிந்தே இருந்தனர் எனவே, இந்நாட்டு மக்கள் புத்தறிவு பெறுவதை தங்கள் கடமைகளில் முக்கியமானது என மேற்கொள்ள, அவர்கள் மனமொப்பவில்லை தனது அழிவை, வலியச் சென்று எவர்தான் அணைத்துக் கொள்ள சம்மதிப்பார்? நிற்க.

புத்தர் காலத்திலே கதை முகம் காட்டிய பகுத்தறிவுப் புரட்சி, நமது காலத்தில் சர். தியாகராயர் நாளில் மீண்டும் ஓர்முறை புன்முறுவல் முகம் காட்டத் தொடங்கியது. அவ்வறிவொளிப் பரப்பரை பட்டுவிடாமல், மக்களின் மன மாசு அடைத்து, பலவித கஷ்ட நஷ்டங்களையும் பொறுமை காட்டி சகித்துக் கொண்டு, இச்சகத்திற்கு இணங்காது, இடுக்கண்களுக்கு அஞ்சாமல், கேலிக்கும் கண்டனத்துக்கும் தலை வணங்காமல், மக்களின் சிந்தனையைத் தூண்டி வரும் பணியினைத் தொடர்ந்து செய்து வருகிறோம் நாம்.

இந்த நம் உழைப்பு வெற்றி பெற்றுள்ளதா அல்லது விழலுக்கிறைத்த நீராகி உள்ளதா எனும் உண்மையை அறிந்து கொள்வதற்கு, பற்பல ஏடுகளை நாடத் தேவை இல்லை—அதிலுள்ள எழுத்து வரிகளுக்கிடையில் துருவித் துருவி ஆராயும் அவசியமுமில்லை.

வாழ்க்கைத்துறை அனைத்திலும், குடுகுடு கிழவர் முதல், மார்பை நிமிர்த்தி நடைபோடும் கட்டிளம் காளையர் வரையில், புது மறுமலர்ச்சியுடனும், புத்தம் புதிய நம்பிக்கையுடனும். பொது வாழ்வில் ஈடுபட்டு வருவதே போதிய சாட்சியமாகும். இவர்கள், எந்த அரசியல் கட்சியில் இடம் பெற்று இருந்தபோதிலும், காண்கின்ற உலகை, மக்கள் வாழ்வதற்கேற்ற சுக ராஜ்யமாக மாற்றி அமைக்க நம்மால் முடியும்—நாமதான் செய்தாக வேண்டும்—என உறுதி கொண்டு, பொது வாழ்வில் ஈடுபடுவதே, மதப்பார்வைக்கு மாறுபட்ட புதிய நோக்கு, மகத்தான வெற்றி பெற்று வருகிறது என்பதற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டு.

இப்புதிய நிலை தினம் தினம் வளர்ந்து கொண்டே வருகிறது—இனி, இதன் வளர்ச்சியை வைதீகத்தால் தடுத்து நிறுத்திவிட முடியாது—என்ற மறுக்க முடியாத எண்ணம், நம்மை அகமகிழச் செய்கிறது. அதுவுமல்லாமல், நமது பணி நியாயமானது என்ற இடநம்பிக்கையையும் நமக்குத் தருகிறது. அத்துடன், இன்னல் பல ஏற்றபோதிலும், காலந் தாழ்த்தியாவது, இறுதியில் நாம்தான் வெற்றி பெறுவோம் என்ற சிறந்த உண்மையையும், நமக்கு, இத்துறையில் இதுவரை நாம் பெற்றுள்ள வெற்றி, போதிக்கிறது.

மக்களின் மன இருளை அகற்றி, புதிய வாழ்க்கைத் தத்துவத்தை அவர்களுக்குப் போதித்து, வெற்றி கண்டு பூரித்திருக்கும் நாம், வெற்றி விழா கொண்டாட விழைவதும் முன்வருவதும் இயற்கையேயாகும். இதைக்கண்டு கோபிப்போரும், கைபாண்டி செய்வோரும், வெளிப்படையாகக் கண்டிப்போரும், இருக்கத்தான் இருப்பர்.

அவர்கள் எதிர்ப்புதான், நமக்கு ஊக்கந்தரும் கருவூலம். அவர்கள் ஏச்சுத்தான், நமது கொள்கைக்கு மறைமுகமாக ஆக்கந் தந்திருக்கிறது.

நமது பணியினை, அவர்கள் எதிர்க்காமல் இருந்திருந்தால், சிறு சொற்களால் தூற்றாமல் இருந்திருந்தால், இவ்வளவு குறைந்த காலத்தில், இன்று பெற்றுள்ள அளவு வெற்றி பெற்றிருக்க முடியாது—முக்காலும் முடியாது.

அவர்கள் காட்டிய மூட எதிர்ப்பு, புதிய கண்ணோட்டம் வெற்றி பெற வழி செய்திருக்கும்போது, நாம் எதிர்ப்பாளர்களைப் பாராட்டுவதே முறையாகும். வாழ்க எதிர்ப்பாளர்! வீழ்க அவர் வசை!

எண்ணம், செயலின் முன்னோடும் பிள்ளை! செயலின் தூண்டுகோல்! செயலை உருவாக்கும் ஒரு ஒளி விளக்கு!

எனவே, எது தேவை! எண்ணப் புரட்சி தேவை! உடனடித் தேவை! மற்றத் தேவைகள் அனைத்தும் அதைப்பற்றி நிற்பதேயாகும்—தொடர்ந்து வருவதுமாகும்.

நீலகிரியில் அரிசி பங்கீடு உயர்வு

மலபார், நீலகிரி, தென் கன்னடப் பகுதிகளில் அரிசி பங்கீட்டின் அளவு ஏழு அவுன்சிலிருந்து 12 அவுன்சாக உயர்த்தப்பட்டது என்று சென்னை உணவு அமைச்சர் சி. சுப்ரமணியம் கூறினார். ஜூன் 13 முதல் இது அமுலுக்கு வரும்.

பெல்லாரியில் பிச்சைக்காரர்கள்

பெல்லாரியில் 7000 பிச்சைக்காரர்கள் இருக்கின்றனர்.

இவர்களில் பெரும்பான்மையோர் பக்கத்து ராஜ்யங்களிலிருந்து வந்தவர்கள் என்று அறிவிக்கப்பட்டது.

இலங்கை பாராளுமன்றத்தில் இந்தியர்கள் நியமனம் ரத்து

இலங்கை சர்க்கார் முடிவு

"இலங்கை பிரஜைகளாகப் பதிவு செய்துகொண்ட இலங்கை இந்தியர்கள், பாராளுமன்றத்தில் நியமிக்கத் தகுதியற்றவர்கள் என்று இலங்கை அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது."

இந்தியர்களுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள நான்கு தொகுதிகளிலன்றி வேறு எந்தத் தொகுதியிலும் பதிவு செய்துகொண்ட இந்தியர்கள் போட்டியிடுவதைத் தடுக்கும் சட்டமொன்று நிறைவேற்றப்படுமாம்.

இப்போது மேல்சபை கீழ்சபை இரண்டிலுமாக இரண்டு பேர் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்; இந்த நியமனத்தை இலங்கை சர்க்கார் ரத்து செய்கின்றனர்.

வருகிற ஜூலை மாதத்தில் பதிவு செய்துகொண்ட இந்தியர்களுக்குப் பாராளுமன்றத்திற்கு நான்கு பேர்களை அனுமதிக்கவும் இந்தியப் பிரஜைகளுக்குத் தனியாக ஒரு வாக்காளர் பட்டியல் தயார் செய்யவும் மசோதா ஒன்று இலங்கைப் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படும் என்று இலங்கைப் பிரதமர் கொத்தலாவல அறிவித்தார்.

கண்ணைப் பறித்திடு! காணிக்கை தந்திடு!

டில்லிக்கு 'கல்வி இலாகா'வை தாரை வார்த்திட யோசனை

ராஜ்யத்துக்குத் துரோகம் இழைக்கும் பேச்சு!

ராஜ்ய சர்க்கார்களிடமிருந்து கல்வி இலாகாவைப் பறித்துவிட வேண்டுமென்ற 'புத்திசாலித்தனமான' யோசனையை, இந்திய ஊழியர் சங்க செயலாளர் எஸ். ஆர். வெங்கடராமன் என்பவர் வெளியிட்டிருக்கிறார்.

கல்வி இலாகா, மத்திய சர்க்காரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று இந்தக் கனவான் யோசனை கூறியிருக்கிறார்.

எல்லா ராஜ்ய சர்க்கார்களும் ஆதாரக் கல்வித் திட்டத்தை அமுல் நடத்துவதில் தத்தமது ராஜ்யத்தின் தரத்துக்கும் நிலைமைக்கும் தகுந்தபடி மாற்றிக் கொள்கிறார்களாம்; எனவே, கல்வி இலாக்கா இனி ராஜ்ய சர்க்கார்களிடம் இருக்கக் கூடாதாம்!

இதற்காக, அரசியல் சட்டத்தை திருத்தலாம் என்கிறார் வெங்கடராமன்.

கல்வி முறை ராஜ்யத்துக்கு ராஜ்யம் மாறுதலாக இருப்பதால் 'தேசிய' ஒற்றுமை ஏற்படவில்லை என்று இவர் வருந்துகிறார்.

நேற்று மாலை, பேசிய பேச்சிலே, இக் கருத்துக்களை வெளியிட்டார்.

மத்தியப் பிரதேச அமைச்சர் ராஜினாமா

காரணம் தெரியவில்லை?

மத்தியப் பிரதேச கவர்னர் டாக்டர் பட்டாபி சீதாராமையா அவர்கள் சர்க்காரின் அபிவிருத்தி இலாகா அமைச்சர் ஆர். கே. பட்டேலின் ராஜினாமாவை ஏற்றுக் கொண்டார்.

ராஜினாமாவின் காரணம் என்னவென்பது இதுவரைப் தெரியவில்லை.

கராச்சி—டாக்கா

நேரடி விமானப் போக்குவரத்து

பாகிஸ்தான் முதலமைச்சர் முகமது அலி, கராச்சி—டாக்கா நேரடிப் போக்குவரத்து விமான சர்வீசை ஆரம்பித்து வைத்தார்.

பாகிஸ்தான் முழுமையும் சுலபத்தில் செல்வதற்கு இந்தப் போக்கு வரத்துப் பயன்படும் என்று முகமது அலி கூறினார்.

இப்போக்கு வரத்தில் ஏற்படும் நஷ்டம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 10 லட்சம்; இதை பாக் மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ளும்.

காரைக்குடியில் குறள் விழா

30 31—5—54 தேதிகளில், இங்கர் திருக்குறள் கழகத்தாரால், கந்தி திடலில் குறள்விழா முறையே தோழர்கள் சா அப்பா துரையார் தலைமையிலும், சி. இலக்குவனார் தலைமையிலும் நடைபெற்றது. முதல் நாள் நிகழ்ச்சியில் திரு. அழ. பழனியப்பனார் யாவரையும் வரவேற்றார்; திரு இராம. பெரியகருப்பன் ஆண்டு அறிக்கை வாசித்தார். தலைவரின் தலைமையுரைக்குப் பின், குறள் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு தலைவரால் பரிசுகள் வழங்கப்பட்டன. பின்னர், அண்ணாமலைப் பல்கலைக் கழக தமிழ் விரிவுரையாளர் திரு உ. பழனி, கடலூர் தோழர் வீரமணி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தலைவரின் முடிவுரைக்குப் பின், முதல் நாள் விழா முடிவுற்றது.

இரண்டாவது நாள் நிகழ்ச்சியில், தலைவர் திரு சி இலக்குவனார் அண்ணாமலை பல்கலைக் கழக விரிவுரையாளர் மு அண்ணாமலை, தோழியர் அருள்மொழி, தோழர் டி. கே. சீனிவாசன் திருக்குறள் வி. முனுசாமி எம்.பி. ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

தலைவர் முடிவுரைக்குப் பின், குறள் கழகச் செயலாளர் திரு. தெனப்பன் நன்றி கூறினார்.

கதிர் இயக்க நோய்

5 ஜப்பானியர்கள் மருத்துவ மனையில்!

டோக்கியோ, ஜூன் 7—

பிகினி தீவில், கீர்வலிக் குண்டு வெடிக்கப்பட்டபோது பசிபிக் கடலில் சென்ற 'ஜின்ட்ஸ்ரவா மாரு' என்னும் ஜப்பானியக் கப்பலின் அதிகாரிகள் ஐவர் அணுசக்தி நோய் காரணமாக ஒரு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர்.

சந்தேகத்தின் பேரில் இவர்கள் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார்கள் என்றும், அபாயகரமான நிலைமை இல்லை என்றும் அறிவிக்கப்படுகிறது.

கும்பமேளா......

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நாம வைத்துக் கொள்வோம்—வீட்டிற்குத் திரும்பும் தொழிலாளி பஞ்சாங்கமாகக் காட்சி தரும் பத்திரிகையைப் புரட்டுகிறான்—இன்று கன்னியா ராசிக்காரனுக்குத் தலையில் அடி—என்றெழுதியிருப்பதாக இருந்தால், அந்தத் தொழிலாளி, எவ்வளவுதான் மார்பைத் தட்டிக் குடித்து வருபவனாயினும்—அவன் அந்த சோதிடத்தை நம்பாமல் இருப்பான்? அவன் உள்ளத்தில் அந்தக் கருத்துக்கள்—புற்றுக்குள் அரவம் புகுவதைப்போல்,—புகாமலா இருக்கும்?"

கும்பமேளாக்கள் நிகழும் நாட்டில்!

—(:)—

முன்னேற்றம் காண மூடத்தனம் முறிய வேண்டும்

—(o)—

பண்பு பிறக்க வேண்டும்-பகுத்தறிவு காண வேண்டும்

முற்போக்காளர் கூட்டணி அமைப்போம் வாரீர்!

[7—6—54-ல், சென்னை, ஆழ்வார்பேட்டை மக்கள் முன்னேற்ற மன்றத்தின் 2-வது ஆண்டு விழாவில், பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் ஆற்றிய சிறப்புரையின் ஓர் பகுதி நேற்றைய இதழில் வெளிவந்துள்ளது. மற்றைய பகுதிகள் கீழே தரப்படுகிறது.]

"முன்னேற்றம்-முன்னேற்றம் என்பதுதான் என்ன? ஐந்து ரூபாய் வைத்திருப்பவனுக்கு, மேலும் பத்து ரூபாய் கிடைத்துவிடுவது முன்னேற்றமா? சரியாகத் தாளமே போடத் தெரியாமல் இருந்தவன், 'ராக பாவத்'துடன் பாடுகிறான் என்று சொல்வது முன்னேற்றமா? இப்படி தனித்தனி நபர்களின் வளர்ச்சியா நாட்டின் முன்னேற்றமெனப்படுவது? அதுமட்டும் அல்லவே! மனிதன் பொருளாதாரத் துறையில் மட்டும் முன்னேற்றம் கண்டு விட்டால், அதுவே முழு முன்னேற்றத்தையும் மனிதனுக்குத் தந்துவிட்டதென்று பொருள்? கிடையாதே! மக்கள் எல்லாத் துறையிலும் முன்னேற்றம் காண வேண்டும்."

—இவ்வாறு, பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் குறிப்பிட்டுவிட்டு, தொடர்ந்து பேசியதாவது :—

"நாட்டில் இரண்டு சக்திகள் இருக்கின்றன—ஒன்று, 'நாடு முன்னேறிவிட்டது; நாடு முன்னேறிவிட்டது'—என்று சொல்லும் சக்தி! இரண்டாவது சக்தி—'நாடு முன்னேறவில்லை; இன்னமும் நாடு முன்னேற்றப்படவேண்டிய நிலையில்தான் இருக்கிறது,' என்று கூறும் சக்தி!! இந்த இரண்டு சக்திகளில், நானும், நண்பர் ஜீவாவும், இரண்டாவது சக்தியில்—நாடு இன்னும் முன்னேறவில்லை என்று கூறும் சக்தியில்—இருக்கிறோம்!

"அப்படி நாடு முன்னேற வேண்டும் என்று சொன்னாலும், அந்த முன்னேற்றத்திற்கான வழி காண்பதில் வேறுபட்டிருக்கிறோம். சென்னையிலிருந்து காஞ்சிபுரம் செல்ல நான்கு பாதைகள் உண்டு; எப்படிப் போனாலும் காஞ்சீபுரத்திற்கே செல்லும்; அவரவர்களுக்குப் பிடித்தமான வழியில் செல்லலாம்; அதைப் போன்றே நண்பர் ஜீவா, நாட்டின் முன்னேற்றத்திற்காக ஒரு பாதையிலே செல்கிறார்—அதுவே நல்ல வழி என்றும் நினைப்பார்; இவர் நினைப்பில் உள்ள நாணயத்தை நாம் மதிக்கிறோம்.

"அதே போன்று நானும் நாட்டின் முன்னேற்றத்திற்காகத்தான் வேறு ஒரு வழியில் செல்கிறேன்—அந்த வழி நல்லது என நினைக்கும் என்னுடைய நாணயத்தை அவர் (ஜீவா) மதிப்பார்—மதிக்க வேண்டுமே என்று எடுத்துக்காட்டுவதுடன், அவரது நண்பர்களுக்கும் இந்த உண்மையை அவர் சொல்ல வேண்டும்."

"மக்கள் பஞ்சத்தால், பசியால், பட்டினியால் வாடுகிறார்கள்; வதைகிறார்கள்; இந்த நிலை மாற்றப்பட வேண்டும் — மறுப்பாரில்லை!

"தமிழ் ஆட்சி மொழி ஆனால்தான் மக்கள் தங்கள் கருத்தைப் பிரதிபலிப்பதாக அரசு இருக்க முடியும்—இல்லை என்று சொல்வாரில்லை.

"நாட்டிலே சாதிப்பிரிவுகள் பல கொடுமைகளைச் செய்கின்றன—ஒழிக்கத்தான் வேண்டுமே அவைகளை — சொல்லாதார் யார்? வெள்ளை உடை தரித்த இராமலிங்கர் முதல் காவி உடையணிந்த மடத்தினர் வரையில்—யார்தான் எடுத்துச் சொல்லவில்லை?

"நல்ல மனிதன் — உடலும், உறுப்புகளும் எல்லோரையும் போன்றே பழுதின்றி அமையப் பெற்றுள்ளவன்—காலடி எடுத்து வைத்து நடந்ததும் காலவலி என்று சொல்லிக் கொண்டே கீழே விழுகிறான் என்றால், என்ன பொருள்? நல்ல வைத்தியன உடனே, அது, காலில் இரத்த சோகையிருக்கிறதினால் ஏற்படுகிறது என்று சொல்ல மாட்டானா? அந்த மனிதன் மேலும் நன்றாக நடந்து செல்வதற்கு இரத்த சோகைதான் காரணம் என்றால் அந்த இரத்த சோகை ஒழிய அவன் மருந்துண்ண வேண்டுமல்லவா?

"அதைப் போன்றே நாட்டு மக்கள் நன்றாக வாழவொட்டாது தடுப்பவை, எதுவானாலும் அவற்றை ஒழிக்க வேண்டாமா?

கோவில் தடுக்கிறதா—இடித்துவிடு! குளம் தடுக்கிறதா—தூர்த்துவிடு! சாஸ்திரம் தடுக்கிறதா—எரித்துவிடு! ஆகமம் தடுக்கிறதா—அகற்றிவிடு! இப்படி, மக்கள் முன்னேறவொட்டாது, வாழவொட்டாது தடுத்து நிறுத்துகிற எதுவானாலும், அது எவ்வளவு பெரிய தானாலும் அவற்றை எல்லாம் ஒழிக்க வேண்டாமா?

"இந்த, மக்களை முன்னேற விடாது செய்யும் காலட்சேப நிகழ்ச்சிகளும், திருவிழாக்களும் நடக்கின்ற நடந்துகொண்டிருந்தால், நாடு முன்னேறுமா?'

"இவையெல்லாம் நண்பர் ஜீவா ஒருகாலத்தில் நாட்டவருக்குச் சொன்னவைதான்—நான் புதிதாகச் சொல்லவில்லை! அவர் சொன்னது என் செவியில் நுழைந்து, சிந்தையில் கலந்து உயிரோடு ஒன்றிவிட்டது! அவர் வேண்டுமானால் இப்போது வேறு இடம் சென்றிருக்கலாம்;—சென்றிருக்கிறார் என்றால், 'இவை எல்லாம் கூடாது' என்பதனால் அல்ல; இந்தப் பணி செய்யத்தான் அண்ணாதுரை போன்றவர்கள் வந்துவிட்டார்களே—நாம் வேறு துறையைக் கவனிப்போம் என்ற எண்ணத்தில்தான!"

"ஆழ்வார்பேட்டை மக்கள் முன்னேற்ற மன்றத்தின் 2-ம் ஆண்டு விழா, பல கட்சியில் ஈடுபாடுள்ள தோழர்கள் பேசுகிற கூட்டத்துடன் நடைபெறுகிறது.

இப்படி பல கட்சித் தோழர்களும் ஒன்றாகக் கூடுகிற நேரத்தில், நாம், ஒன்றை மறந்து விடலாகாது; இங்கே வந்து பேசுகிற எவரும் தங்கள் தங்கள் கட்சிக் கொள்கைகளை கைவிட்டு விட மாட்டார்கள். கேட்க வந்திருக்கிற நீங்களும், பிற கட்சியினரின் ஒரு அமைமணி கோர்ப் பேச்சில் உள்ள கொள்கைகளிலிருந்து மாறிவிட மாட்டார்கள்.

ஒரே மேடையில் பல கட்சியினரும் ஒன்று கூடும்போது ஒருமித்த, எல்லோருக்கும் ஒருமைப்பாடான கருத்துக்களை சொல்வதில் தவறில்லை; அதுதான் நியாயமானதும் கூட!

தோழர் ஜீவா குறிப்பிட்டார்—"நான் கம்யூனிஸ்ட் கட்சியில் ஊறிப்போனவன்; டாக்டர் நாயுடு காங்கிரஸ் கட்சியிலும், தோழர் அண்ணாதுரை திராவிடர் இயக்கத்திலும் ஊறிப்போனவர்கள்"—என்று!

"அவருக்கு நினைவூட்ட விரும்புகிறேன்—'அவர் சுயமரியாதை இயக்கத்தில் கெடு நாட்கள் உழைத்து ஊறிப் போனவர்' — என்பதை! இனி எங்காவது அவர் பேசுகையில், தாயகத்தை, தான் வளர்ந்த தொட்டிலை மறவாமல், 'சுயமரியாதை இயக்கத்தில் ஊறி, பின்னர் கம்யூனிஸ்ட் கட்சிக்கு வந்தவன்,' என்று சொல்ல வேண்டும் அவர்—என்று அவரைத் திருத்த விரும்புகிறேன்."

பல கட்சித் தோழர்களையும் அழைத்துப் பேச வைக்கும் இந்த மன்றத்தார், அவரவர்களுக்குத் தனியான தலைப்புத் தந்துவிடல் நலம் என்று!

என்னை சாக்ரடீசைப் பற்றியும், நண்பர் ஜீவாவை கார்ல் மார்க்சைப் பற்றியும், டாக்டர் நாயுடுவை லோகமான்ய திலகரைப் பற்றியும் பேசச் செய்யலாம்; அதில்லாமல் பல கட்சித் தோழர்களையும் கொண்டு வந்து ஒரே மேடையில் அமர்த்தி, ஒருவரோடு ஒருவர் மோதிக்கொள்ளச் செய்யலாகாது.

பாட்டுக் கச்சேரியில்; மிருதங்கக்காரரும் கஞ்சிராக்காரரும் ஆவர்த்தனம் செய்கையில் ஒருவரோடு ஒருவர் அடித்துக் கொள்பவர் போன்றிருந்தாலும், இருவரும் ஒன்று சேர்ந்துதான் ஆவர்த்தனத்தை முடிப்பர்; ஆவர்த்தனத்தில் மிருதங்க வித்துவானும், கஞ்சிரா வாத்தியக்காரரும் 'சண்டை' போட்டுக் கொள்வது போன்றே, பொது மேடையிலும் விவாதக் கச்சேரி வைத்துக்கொள்ளலாம்; ஆவர்த்தனத்தில் ஒன்றுசேர்வது போன்று, விவாதக் கச்சேரியில் ஈடுபடுபவரும் ஒன்று சேர்வர்; ஆனால், கச்சேரி கேட்கிற நீங்கள், ஒருவரோடு ஒருவர் சண்டை பிடித்துக் கொள்ளலாகாது; பொது மேடையில் பேசுகிற எல்லோருடைய கருத்தையும் நீங்கள் கேட்டு, உங்கள் அறிவுத் தராசில் எடை போட்டு எது நல்லதோ அவற்றை எடுத்துக்கொள்ளலாம்.

நான் ஆரம்பத்தில் சொன்ன மாதிரி, பல கட்சித் தோழர்களுக்கும் வேறு வேறு தலைப்புக்கள் தந்துவிட்டால் மக்களும் பயன் பல பெறுவர்; பேசுபவர்களும், தங்கள் கட்சி மேடையில் பேச இயலாததைற்றை அதிகமாகப் பேச இயலும். கம்யூனிஸ்ட் கட்சி மேடையில் இன்று பொதுவுடைமைத் தத்துவச் சிறப்பு குறித்து தோழர் ஜீவா பேசிக்கொண்டிருக்க இயலாது; இன்றுள்ள முக்கியமான அரசியல் பிரச்னை குறித்து, புதுவைப் போராட்டம் குறித்துப் பேச வேண்டியிருக்கும்; நானும் அப்படித்தான்; ஆகவேதான், நல்ல பல பொருள்கள் பற்றி மக்களுக்கு விளக்க இந்த மாதிரி மன்றங்களில் ஒன்றாகக் கூடும்போது விரிவாகப் பேசலாம்.

ஆகவேதான். நான் இப்படிப் பட்ட கூட்டங்களை அடிக்கடி கட்டணம் வாங்காத கல்லூரி என்று குறிப்பிடுவது.

தோழர் ஜீவா முதியோர் கல்வியின் அவசியம் குறித்துப் பேசினார்.

"முதியோர் கல்வி என்றால், கரும்பலகை வாங்கிக் கொடுத்து முதியோருக்கு அ, ஆ,—இது அணில் பார், அது ஆடு பார் என்று கற்றுத் தருவது அல்ல; நாட்டு மக்களுக்குத் தேவையான நல்ல பொது அறிவைப் பற்றியும், உலகைத் திருத்திய உத்தமர்களைப் பற்றியும், அவர்கள் செய்த சீர்திருத்தச் சேவைகள் குறித்தும், பல தியாக வரலாறுகளையும் அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

நாம் மக்களை முன்னேற்றம் வேண்டுமெனவிழைகிறோம்; மன்றம் கண்டுள்ளோம்; மக்கள் முன்னேற்றம் குறித்துப் பேசிக் கொண்டிருக்கிறோம்; அதே நேரத்தில், சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் மயிலாப்பூரிலே, ராமாயணம் பற்றியும், திருவல்லிக்கேணியில் பாரதம் பற்றியும், புரசைவாக்கத்திலே காயத்ரி புராணம் பற்றியும் கதா காலட்சேபம் நடைபெறுவதையும் பார்க்கிறோம்.

சனிக்கிழமையன்று 'இந்து' பத்திரிகையைப் புரட்டினேன், குறைந்தது சென்னையில் மட்டும் பதினைந்து இடங்களில் இப்படிக் காலட்சேபம் நடைபெறும் என்ற அறிவிப்பைக் காண்கிறோம். இவை நடைபெற்றுக் கொண்டிருந்தால் மக்கள் எப்படி முன்னேறுவர்?

நாட்டிலே 'கும்பமேளா'க்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றனவே — பத்திரிகையைப் புரட்டினால் வடநாட்டில் ஜோத்பூர் எனும் இடத்தில், பெண்கள் எல்லாம், தங்கள் குழந்தைகளுக்கு அம்மை நோய் வராமல் இருக்க, யம தேவனை வேண்டிக் கொள்ள, நன்னீரிலே நிர்வாணமாகச் செல்கிறார்கள் என்று பார்க்கிறோமே! திருச்சியருகில் சமயபுரத்திற்கு அடுத்த புரத்தாக்குடி எனும் ஊரில் ஒரு சாமியாரின் கல்லறையில் உள்ள சாம்பலைப் பூசிக் கொண்டால், கரு தரிக்கும்—பேய் பூதம் ஓட்டமெடுக்கும் என்று எண்ணி, எண்ணற்றவர் சாரை சாரையாகச் செல்கிறார்களே!

இவர்கள் எல்லாம் எப்படித்தான் முன்னேறுவது? அவர்கள் உள்ளங்களிலே இந்தப் பழமை எண்ணங்கள் ஊறிப் போயிருக்கின்றனவே! அந்தப் பழமை எண்ணங்கள் நாட்டு மக்களின் உள்ளத்திலிருந்து அடியோடு அகற்றப்படாதவரையில் எத்தனை நல்ல கருத்துக்களைச் சொன்னால்தான் என்ன பலன்.

"பண்படாத நிலத்தில் அல்லாது பாறையில், எவ்வளவு நல்ல சம்பா வைத்தான் தூவினால் என்ன? பயிர் வளருமா?"

"அவர்கள் மனத்தை நிரப்பியிருக்கிற மூட எண்ணங்கள், முதலில் அகற்றப்பட்டாக வேண்டும்."

பண்டித நேரு சமீபத்திலே சொன்னார்—தனக்கு சோதிடத்திலே நம்பிக்கை இல்லை என்று! இந்த நாட்டில் எந்தப் பத்திரிகையைப் புரட்டினாலும் தினப் பலன், வாரப் பலன் வருவதைக் காண்கிறோம்.

ஆலை மில்லிலே வேலை பார்க்கிறான் ஒரு தொழிலாளி; அங்கே அவனுக்கும் மேஸ்திரிக்கும் தகராறு; மேஸ்திரி, தொழிலாளியைத் தடியால் அடித்துக் காயப்படுத்துவ

(2-ம் பக்கம் பார்க்க)

வேலூரில் திராவிட முன்னேற்றக் கழக மாநாடு: ஜூன் 19—20

உலக அரங்கில்

இரங்கூன் :
ஏராளமான கம்யூனிஸ்டுகளும், கரேனிய கிளர்ச்சிக்காரர்களும் சரண் அடைந்து விட்டனர் என்று சர்க்கார் கூறுகிறது. உட்குழுக்குள் ஏற்பட்ட குழப்பம் காரணமாகவே அவர்கள் சரண் அடைகின்றனராம்.

★

செய்கோன் :
தின்—பின்—பூ வீழ்ச்சிக்குக் காரணமான வியட்மின் துருப்புகள் இப்போது ஹனோய்க்கு 37 மைல் தூரத்தில் உள்ள சிவப்பு நதிப் பிரதேசத்தை சூழ்ந்து கொண்டனர் என்று தெரிகிறது.

* * *

வியட்நாம் சர்க்காரின் படை திரட்டும் ஏற்பாட்டைக் கண்டித்து வியட்நாம் மாணவர்கள் கிளர்ச்சி செய்கின்றனர்.

★

ஹாங்காங் :
காயமடைந்தவர்களைத் திருப்பி அனுப்பவும் அதற்காகப் பேசவும். தயார் என்று கூறி இரண்டு இடங்களைக் குறிப்பிட்டு அங்கே ஆயுதமேதும் இன்றி செஞ்சிலுவைக் கொடியின் கீழ் பேசலாம் என்று வியட்மின துருப்புகள் பிரெஞ்சு சர்க்காருக்கு கூறியுள்ளனர்.

★

பாரிஸ் :
உஷார் நடவடிக்கை என்ற பெயரில் பிரெஞ்சுக் கம்யூனிஸ்டு கட்சியின் மத்தியக் கமிட்டியிலிருந்து பலர் நீக்கப்பட்டனர். சென்ற ஏழாண்டு காலத்தில் பிரெஞ்சுக் கம்யூனிஸ்டு கட்சியிலிருந்து 9 00,000 பேர் விலகினார்கள் என்று தெரிகிறது.

★

கேப்டவுன் :
இனவாரி வேற்றுமையை ரத்து செய்ய வேண்டுமென்று கோருவோர் அந்த இனப் பிரிவினை ஏற்படுத்தியவரையே கண்டிப்பதாகும் என்று டாக்டர் மலான் கூறினார்.

★

கொலம்பியா :
பாதுகாப்பு இலாகாவைச் சேர்ந்த சார்லஸ்வில்சன், கொரிய பிரச்சினைக்காக கம்யூனிஸ்டுகளுடன் இரகசியமாகப் பேசத் தயாராக இல்லை என்று கூறினார்.

★

சிங்கப்பூர் :
தென் கிழக்கு ஆசியப் பிரச்சினைகள் பற்றி நேருவுடன் நீண்ட நேரம் பேசவேண்டும் என்று ஆஸ்திரேலிய வெளி நாட்டமைச்சர் கேசி கூறினார்.

★

ஹாலிவுட் :
லியூ அய்ரஸ் என்ற ஹாலிவுட் நடிகர், தான் எடுக்கப் போகும் மத சம்பந்தமான படமொன்றுக்குத் தேவையான செய்திகளைச் சேகரிக்க உலக முழுமையும் சுற்றுப் பயணம் செய்கிறார்.

★

கொழும்பு :
கனடா தேயிலைக் கவுன்சில் என்ற புதிய ஸ்தாபனம் ஒன்று கனடாவில் ஜூன் 17-ந் தேதி ஆரம்பிக்கப்படும். இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளிலிருந்து தேயிலை ஏற்றுமதி பற்றியும், தேயிலையின் தரம் பற்றியும் இந்த அமைப்பு இரு நாடுகளுக்கும் உதவுமாம்.

★

மெல்போர்ன் :
ஆஸ்திரேலிய வியாபார அமைச்சர் ஜான் மெகீவன், அமெரிக்கா மீண்டும் தன் கோதுமை விலையைக் குறைக்கும் என்று கூறினார்.

கெய்ரோ :
பிரிட்டன், எகிப்து ஆகிய நாடுகளுக்கிடையே, 'சூயஸ்' பாலைவனப் பிரதேசம் பற்றி நிலவும் கருத்து வேற்றுமையைப் போக்க, நான் சமரசம் செய்வதாக சவூதி அரேபியா தெரிவித்திருக்கிறது.

★

வாஷிங்டன் :
நீர்மூழ்கிக்கூண்டு ஒன்றின் சமீபத்திய தயாரிப்பொன்றை சோவியத் ரஷ்யா உட்பட எல்லா நாடுகளின் பிரதிநிதிகளுக்கிடையே வெடித்துக்காண்பிக்க வேண்டுமென்று அமெரிக்க அணுசக்திக் கமிஷனைச் சேர்ந்த ஒருவர் பேசினார்.

• • •

நேச நாடுகளின் இராணுவக் குழு ஒன்று தென் கிழக்கு ஆசியப் பாதுகாப்பு பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறது. அவர்கள் பாதுகாப்பு இலாகாவிற்கு அறிக்கை ஒன்றைத் தருவார்கள்.

★

ஹனோய் :
ஐரோப்பாவில் வசிக்கும் ரஷ்யர்கள், கம்யூனிஸ்டு நாட்டினர் ஆகியோரின் பெயர்ப் பட்டியல் ஒன்றைத் தயார் செய்யுமாறு ஐரோப்பாவின் உள்நாட்டமைச்சர் ஹொமியா உத்தரவிட்டிருக்கிறார்.

★

ஜினீவா :
தென் ஆப்பிரிக்காவில் உள்ள தொழிலாளர்கள் நிலைமை பற்றி விசாரணை செய்ய வேண்டும் என்று ஐ. எல் ஓ. நிறுவனத்தை வேண்டி உலக தொழிற் சங்கங்கள் யூனியன் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது.

* * *

பாரிஸ் பேச்சில் கலந்து கொண்ட இந்தியப் பிரதிநிதி ஆர். கே. நேரு இந்தியாவுக்குத் திரும்பினார்.

★

நியூயார்க் :
ஆப்பிரிக்காவில் வாழும் 140 மில்லியன் மக்கள் இதுவரை பிறரையே நம்பி வாழ்ந்துவந்த நிலைமைபோய் அவர்கள் தங்கள் வாழ்க்கைக்கென்று சுதந்திரமாக பொருள்ஈட்ட ஆரம்பித்து விட்டனர் என்று ஐ. நா ஆராய்ச்சி நிலையம் தெரிவிக்கிறது.

★

ஏதென்ஸ் :
தனது அமெரிக்க சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு துருக்கி செல்லும் வழியில் துருக்கியின் பிரதமர் மெண்டரீஸ், ஏதென்ஸில் ஒரு நாள் தங்கி பால்கன் நாடுகளின் ஒப்பந்தம் பற்றிப் பேசுவார்.

★

பாங்காக் :
தனது வெளிநாட்டு வியாபாரத்தை அதிகரிக்கும் நோக்குடன் தாய்லாந்து ஏற்றுமதிக் கட்டுப்பாடுகளை அநேகமாக ரத்து செய்துவிட்டது. அரிசி விலை குறைந்து போனதால் பொருளாதார நெருக்கடியைத் தவிர்க்க இப்படி ஏற்பாடு செய்யப்படுகிறது.

★

லண்டன் :
தொழிற் சங்கத்தைச் சேர்ந்த நிக்கோலி, ஷேர்மிக், என்ற சோவியத் அமைச்சர்கள் சரியான முறையில் திட்டங்களை நிறைவேற்றவில்லை என்று குற்றம் சாட்டினார் என்று மாஸ்கோ ரேடியோ தெரிவித்தது.

* * *

கிழக்கு ஜெர்மனியில் 13-லிருந்து 20 சதவிகிதம் வரையில் விலை குறைவு ஏற்பட்டிருக்கிறது என்று தெரிகிறது.

கழகக் கூட்டம்

★

சேவூர் (வ. ஆ)

தி. மு. கழக 4-ம் ஆண்டு நிறைவு விழா

லால்குடி நடராசன் அரங்கில் (குளக்கரை எதிரில்)

11—6—54 மாலை 6 மணிக்கு

தலைவர் :
போளூர் கே. சுப்ரமண்யம்
துவக்குபவர் : அருண்மொழி
பேசுவோர் :
என். வி. நடராசன்
கண்ணதாசன்
ஏ. எல். சி. கிருஷ்ணசாமி

இரவு 10 மணிக்கு செங்காடு செந்தமிழ் மன்றத்தாரால் 'அன்பின் வெற்றி' நாடகமும் நடைபெறும்.

போஸ்டல் தொழிலாளர் கழகம்

அகில இந்திய போஸ்டல், ஆர் எம். எஸ். தொழிலாளர் கழக சென்னைப் பிரிவின் கூட்டமொன்று சென்னை கோகலே மண்டபத்தில் 10—6—54 மாலை 6-30 மணிக்கு; போஸ்டல் சர்வீசுகளின் உதவி டைரக்டர் ஆர். சுப்பிரமணியம் தலைமையில நடைபெறும். வழக்கறிஞர் வி முனுசாமி சொற்பொழிவாற்றுவார்.

மூஞ்லூர் அண்ணா படிப்பகம்

11—6—54 இரவு 7 மணிக்கு மூஞ்லூர், கீழ வீதியில, தோழர் எஸ். சீதாராம் தலைமையில் மேற்படி படிப்பகத்தின் சார்பில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் க. அன்பழகன் பேசுவார்.

திருமணங்கள்

11—6—54 காலை 9 மணிக்கு நெல்லிக்குப்பத்தில் தோழர் சுந்தரராசனுக்கும்—தோழியர் வெள்ளையம்மாளுக்கும் சீர்திருத்தத் திருமணம் தோழர் சி. உலகநாத(பிள்ளை) தலைமையில் நடைபெறும். தோழர்கள் இளமுருகு, என். முத்து, தோழியர் பொற்செல்வி ஆகியோர் பேசுவர்.

* * *

11—6—54 காலை 9 மணிக்கு சேவூரில் தோழர் கண்ணதாசன் தலைமையில் சேவூர் (வ. ஆ) தி. மு கழகச் செயலாளர் தோழர் வி. தி. செயராமனுக்கும், தோழியர் இரத்தினததிற்கும் திருமணம் நடைபெறும். மணமக்களைப் பாராட்டி தோழர்கள் என். வி நடராசன், ஏ எல். சி. கிருட்டிணசாமி, போளூர் கே. சுப்ரமணியம், தோழியர் அருண்மொழி ஆகியோர் பேசுவர்.

* * *

11—6—54 காலை 7 மணிக்கு தோழர் என். வி. நடராசன தலைமையில் சேவூர் (வ. ஆ) தி. மு கழக செயற்குழு உறுப்பினர் தோழர் ஆர். கோபாலுக்கும் தோழியர் விசாலாட்சிக்கும் திருமணம நடைபெறும்.

ஈ. வெ. கி. சம்பத், எஸ். அப்பாவு
சுற்றுப்பயணம்

ஜூன் 11: காட்டுப்புத்தூர்
காலை: திருமணம்; மாலை: பொதுக் கூட்டம்
12: மேட்டுப்பாளையம் (திருச்சி)
13: அறையூர்
18: மாரண்டஹள்ளி (சேலம்)
22: ஏனங்குடி
23: அம்மையப்பன்
25: முத்துப்பேட்டை
26: குருவிகரம்பை
27: நீடாமங்கலம்
28: திருச்சிற்றம்பூண்டி

கோயில் பணத்தை கல்விக்குச் செலவிடக் கூடாதாம்!

மீனாட்சிசுந்தரனாரின் முடக்குவாதம்!

"கோவில்களின் வருமானத்தை கல்விச் சாலைகளுக்காகச் செலவிடுவது தவறாகும்; வேறு எந்த மதத்திற்கும் சட்டம் இல்லாத போது இந்து மதத்திற்கு மட்டும் சட்டமியற்றுவது சரியல்ல"

என்று தமிழ்நாடு அருள் நெறித் திருக்கூட்டத்தின் பொதுக் காரியதரிசியான ஈ ரோடு மீனாட்சிசுந்தரம் அவர்கள் சேலம் ஜில்லா அருள்நெறி திருக்கூட்டத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

"மத நம்பிக்கையை மீண்டும் நாட்டிலே உண்டாக்கவும், கடவுள்மீது பக்தியை வளர்க்கவும், கருஞ்சட்டைப் யினர்—நாஸ்திகர்கள் பிரச்சாரத்திற்கு எதிர்ப் பிரச்சாரம் செய்யவும் அருள் நெறித் திருக்கூட்டம் பாடுபடுகிறது,"

என்று அவர் மேலும் கூறினாராம்.

சென்னை முதல் அமைச்சர் கே. காமராஜ் அவர்களைச் சந்தித்து இந்து மதத்தை புதுப்பிக்கும் முறைகளைக் கையாள வேண்டுமென்று தான் கேட்டதாக அவர் கூறினார்.

அலகாபாத்தில் கடையடைப்பு

மின்சார வரிக்கு எதிர்ப்பு

பி-சோஷலிஸ்டுகள் கிளர்ச்சி

புதிதாக உத்திர பிரதேச சர்க்கார் விதித்திருக்கும் மின்சார வரியை எதிர்த்து அலகாபாத் நகர் முழுமையும் கடையடைப்பு நடைபெற்றது.

பிரஜா-சோஷலிஸ்டுகள் நடத்திய கடையடைப்பு வெற்றிகரமாக நடைபெற்றதாம்.

இரவு 7-மணி முதல் 9-மணி வரையில் நகரின் பெரும்பான்மையான வீடுகளில் மின்சார விளக்குகள் ஏற்றப்படவில்லை.

மின்சார வரி விதிப்பை ஒட்டி நடைபெறும் இந்தக் கடையடைப்பு பிரஜா-சோஷலிஸ்டுகளின் இரண்டாவது எதிர்ப்பு ஆர்ப்பாட்டமாகும்.

மாலையில் நடைபெற்ற மிகப் பெரிய ஊர்வலமொன்றில் ஏராளமாகப் பெண்களும் கலந்து கொண்டனர். ஊர்வலத்தின் முடிவில் நடைபெற்ற கூட்டமொன்றில் மின்சார வரியை உ. பி சர்க்கார் உடனே ரத்து செய்யவேண்டுமென்ற தீர்மானம் ஒன்று நிறைவேறியது.

மலேரியா

மலேரியா வாரத்தை ஒட்டிப் பேசுகையில் இந்திய சுகாதார அமைச்சர் திருமதி அமிர்தகௌர் மலேரியாவை ஒழிப்பதில் சர்க்காருடன் ஒத்துழைக்குமாறு நாட்டு மக்களைக் கேட்டுக்கொண்டார்.

நிதி அமைச்சர் தேஷ்முக்கும் அவர் மனைவி திருமதி துர்காபாயும் சென்னையின் முன்னாள் அமைச்சர் ஆச்சாரியாரை அவர் வீட்டில் சந்தித்தனர்.

சொற் பயிற்சி வகுப்பு

11—6—54 மாலை 6 மணிக்கு நாகை தி மு கழகக் கட்டிடத்தில் அழகிரி சொற் பயிற்சி மன்றத்தின் சார்பில் தோழர் இரா. ஜெயச்சந்திரன் தலைமையில், 'சமுதாயத் துறையில் தி மு கழகம்' எனும் பொருள் பற்றி பேச்சுப் பயிற்சி வகுப்பு நடைபெறும்.

செய்திக்கதிர்

பயங்கர ஆட்சி
கிழக்கு வங்கத்தில் அதிகாரிகள் பயங்கர ஆட்சி நடத்துவதாகப் பல்வேறு ஜில்லாக்களிலிருந்து செய்திகள் வருகின்றன.

★

குறைகள்
இம்பீரியல் பாங்கி, இந்தியன் பாங்கி, இந்தியன் ஓவர்சீஸ் பாங்கி ஆகியவைகளின் சார்பில், தோழர் நாகையா தலைமையில் தூதுக்குழு ஒன்று வி. வி. கிரியைச் சந்தித்து, குறைகள் அடங்கிய மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்தது.

★

செயற்கை பெட்ரோல்
செயற்கை முறையில் எண்ணெய் உற்பத்தியைப் பரிசீலனை செய்ய நியமிக்கப்பட்ட ஆலோசனைக் கமிட்டி ஸ்ரீநகரில் கூடியது. ஆண்டொன்றுக்கு 3-லட்சம் டன் வரையில் எண்ணெய் உற்பத்தி செய்யப்படுமாம்.

★

நஷ்டம்
சமீபத்தில்பம்பாயில் ஏற்பட்ட ரயில் விபத்தில் ரூ. 46,000 நஷ்டம் ஏற்பட்டதாக பிராந்திய ரயில்வே பொதுஉறவு அதிகாரி கூறினார்.

★

சமாதான காங்கிரஸ்
காங்கிரஸ்காரர்கள், உலக சமாதான காங்கிரசுடன் எவ்வித உறவும் வைத்துக் கொள்ளக்கூடாது என்று சுற்றறிக்கை ஒன்று அனுப்பப்பட்டிருக்கிறது. நேருவே இந்த சுற்றறிக்கையை அனுப்பினாராம்.

★

மதுவிலக்கு
டில்லி ராஜ்யத்தில் மதுவிலக்குக் கொள்கையைப் பரிசீலனை செய்யக் கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது.

★

ஒத்திவைப்பு
அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் முடிவு தெரியும் வரையில் நில சீர்திருத்த மசோதாவைக் கொண்டுவர இயலாது என்று சென்னை முதல் அமைச்சர் கே. காமராஜ் கூறினார்.

★

பல்கலைக் கழகம்
உஸ்மானியா பல்கலைக் கழகத்தை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்வதை ஒத்திபோடவேண்டும் என்று பல்கலைக் கழக செனட் முடிவு செய்துள்ளது.

★

வசிகர திட்டம்
மாணவர்களைக் காங்கிரசில் சேருமாறு வசீகரிக்க பூமிதானம், சம்பத்துதானம் போன்ற திட்டங்களை அவர்கள் முன் வைக்க வேண்டுமென்று காங்கிரஸ் பொதுக் காரியதரிசி அகர்வால் திரு—சொச்சி காங்கிரஸ்காரர்களிடையே பேசுகையில் கூறினார்.

★

தூதுக் குழு
சேலம் நகரசபையின் சார்பில் நகர சபைத் தலைவர் இராமலிங்கம், நகரசபை உறுப்பினர் ஏ. மாரியப்பன் ஆகியோர் கொண்ட தூதுக்குழு ஒன்று சென்னை முதலமைச்சரைச் சந்தித்து சேலம் நகர தண்ணீர் திட்டத்திற்கு பொருளாதார உதவி குறித்துப் பேசினர்.

திராவிட முன்னேற்றக் கழகத் [illegible] தோழர் இரா. செழியன் [illegible] அவர்கள், அழகிரி அச்சகத்தில் [illegible] (மே, ஜூன் [illegible]) வெளியிடப்படுகிறது. ஆசிரியர் : சி. என். அண்ணாதுரை, எம். ஏ.